






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்


தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி



மலர் 1 இதழ் 9 26.02.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. ஸ்ரீதேசிகோபதேசங்கள்-2
2. ஆசாரியர்களுடைய கருணை
3. அச்யுதசதகம்
4. ஸம்ப்ரதாய சுத்தி
5. ஒன்பது பொருள்



# 1. ஸ்ரீதேசிகோபதேசங்கள்-2
## ......மலர் 8ன் தொடர்ச்சி

8. சாஸ்த்ரங்களில் பொதிந்துள்ள நல்ல கருத்துக்களை உலகில் — எல்லோரும் அறிய வேண்டும். அதன் மூலம் அவர்கள் நற்கதி அடைய வேண்டும் எனும் உயர்ந்த நோக்கத்தில் தான் பெருமாள், ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் அவதரிக்கச் (பிறக்க) செய்தான்.

9 ஒளி வீசும் ரத்தினத்தில் மாசு படிந்தது என்றால், அதன் ஒளி தெரியாதன்றோ. ரத்தினத்தை மறைக்கும் அழுக்கை ஒருவன் துடைத்தால் தானாக அது சுடர் விடும். அது போன்றே, ஜீவனாகிய ரத்தினம் ஸம்ஸாரச் சேற்றில் மாசடைந்துள்ளது. அதை துடைத்து பரமாத்மா அவனை ஒளி வீசச் செய்கின்றான்.

10. மரணமடையும் போது காலம், நேரம், இடம், நல் வழி என்று எந்த விதமான நியமமும் இல்லாமல் சரணாகதி அடைந்தவன் எப்படி இறந்தாலும் அவனுக்கு கட்டாயம் வைகுந்தப்பதவியை அளிக்கிறான் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந்நாராயணன்.

11. லக்ஷ்மணன் சீதையை முன்னிட்டு, ராமபிரானிடம் சரணாகதி செய்து, தானும் காட்டிற்கு உடன் வந்து கைங்கர்யம் செய்ய ப்ரார்த்தித்தது போன்று, நாமும் மஹாலக்ஷ்மியை முன்னிட்டு பெருமாளிடத்தில் சரணாகதி செய்ய வேண்டும்.

12. மனசு வாக்கு தேஹம் மூன்றிலும் ஒரே மாதிரி நல் நடத்தையுடன் இருங்கள். சிறந்த ரஸாயனமான இதனை பயன்படுத்துவோர் இம்மையிலும் மறுமையிலும் பரம சௌக்கியமாக வாழ்வர்.

13. ஒரு ஜீவன் ஏதோ ஒரு பிறவியில், தெரிந்தோ தெரியாமலோ செய்த நல்ல காரியம், இப்பொழுது பலன் அளிக்க தொடங்கியுள்ளதால், அந்த ஜீவனுக்கு ஆசார்ய சம்பந்தமும், சரணாகதி செய்யும் வாய்ப்பும் இந்த பிறவியில் கிடைக்கிறது.

14. ஒரு தாய், தன் குழந்தைக்கு வேண்டியதை பார்த்துப் பார்த்து கவனமாக அனைத்தையும் செய்வது போல, சரணாகதன் (ப்ரபன்னன்) என்பவன், ப்ரீதியோடு பெருமாளுக்கும், பாகவதர்களுக்கும் கைங்கர்யம் செய்தல் வேண்டும்.

15. அழகிய பாற்கடலால் சூழப்பட்ட வைகுந்தத்தில் வசிக்கவேண்டிய நாம், கர்ப்பக் குழியில் சாக்கடை நீரால் சூழப்பட்டு இந்த ஸம்ஸாரத்தில் வசிக்கிறோமே, இன்னுமா நமக்கு வைராக்கியம் வரவில்லை!!

16. மஹாலக்ஷ்மியுடன் திருப்பாற்கடலில் அவதரித்த கௌத்துபம் என்னும் உயர்ந்த ரத்தினத்திற்கு சமமானவர்கள் ஜீவாத்மாக்களாகிய நாம். மஹாலக்ஷ்மியை போன்று எம்பெருமான் திருமார்பில் அமரும் தகுதியிருந்தும் அதை இழந்து, மறந்து எங்கோ திரிகிறோமே! இதனை உணரவேண்டும்.

...................... இன்னும் வரும்



## 2. ஆசாரியர்களுடைய கருணை

ஆழ்வாருடைய பாசுரங்களின் கருத்தை நல்ல ஆசாரியர்களுடைய அனுக்கிரஹத்தினாலும் உபதேசத்தினாலுமறிந்தால் அவர்களுக்குத் துளிக்கூட அஜ்ஞானமிருக்காது.

அறிய வேண்டிய ஐந்து ஸங்கதிகளை ரொம்ப நன்றாய் அறிவார்கள்.

அதாவது

(1) ஜீவன்,
(2) பெருமாள்,
(3) நம்முடைய பாபம்,
(4) பெருமாளைக் கெஞ்சிக் கேட்கிறது (சரணாகதி),
(5) பெருமாளுக்கு இஷ்டமான வேலைகளைச் செய்கிறது.

ஆசார்யர்கள், மேலே சொன்ன ஐந்து ஸங்கதிகளை நன்றாய் அறிந்து பெருமாளை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு தன்னிடத்தில் வரும் சிஷ்யர்களுக்கு நல்ல அறிவை உண்டாக்கி, கெட்ட குணங்கள் முதலானவைகளைப் போக்க வேண்டும்.

****************************************************************************************************************************

## 3. அச்யுதசதகம்

**அச்யுதன் என்றால் அடியவர்களைக் கைவிடாதவன் என்று பொருள். அடியவர்க்குமெய்யனுக்கு அச்யுதன் என்ற திருநாமம் பொருத் தமானது தானே. 101 ச்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்தை ப்ராக்ருத மொழி யில் இயற்றியுள்ளார். வடமொழியின் திரிபு இந்தமொழி. அந்தக் காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவ குலத்து ஸ்திரிகள் இம்மொழியில் பேசிவந்தார்கள். தூய இலக் கண அறிவின்மையால் மழலைச்சொல் போல் உள்ளமொழி. இம்மொழியும் வடமொழிபோல் செவிக்கு இனிமையானது. இந்த ஸ்தோத்ரத்தை புரட்டாசித் திருவோணத் தன்று பெருமாள் ஸந்நிதியில் தேசிகன் மங்களாசாஸனம் செய் யும்பொழுது இந்தக் காலத்திலும் ப்ராக்ருத மொழியிலேயே ஸேவிப்பதைக் கேட்கலாம். உதாரணமாக இந்த ஸ்தோத்ரத்தில் ஒரு சலோகம் கீழ்கண்டவாறு.**

**ணம்ஹ தியஸாணணாஹம் ஸச்சம் தாஸாண அச்சுயம் டிரஜோயம்|**
**கலுண இதடதமாலம் அஹிந்த ணயரோ ஸஹாயலேக்க கஇந்தம் ||**

**இதன் வடமொழியாக்கம்:**

**நமத த்ரிதசாநாம் நாதம் ஸத்யம் தாஸாநாமச்யுதம் ஸ்த்திர ஜ்யோதி: I**
**கருடநதீ தடதமாலம் அஹீந்த்ர நகரௌஷதாசலைக கஜேந்த்ரம் ||**

**இதன் பொருள் : கருடநதிக்கரைக்கு பச்சிலை மரம் போன்றவனாய் திருவஹீந்திரபுரத்திலுள்ள ஔஷத மலைக்கு ஒப்பற்ற களிறு போன்றவனாய் என் றும் அழியாத ஒளியாய் அடைந்தவர்களைக் கைவிடாதவனாய், அடியவர்க்கு மெய்யனாயுள்ள தெய்வநாயகனை வணங்குவீராக. இந்த ச்லோகத்தில் அடியார்களை தெய்வநாயகனை வணங்க அழைக்கிறார்.**

# 4. ஸம்ப்ரதாய சுத்தி

## i.ஆசார்யனைப் பெறுதலின் ஆவச்யகதை

சேதநன் தான் நல்வாழ்வைப் பெறுவதற்கும் நற்கதி பெறு வதற்கும் வேண்டிய வழியைத் தேடவேண்டும். அதற்கு வேதாந்த சாஸ்த்ரம் கூறும் சிறந்த விஷயங்களை நிச்சயமான முறையில் அறியவேண்டும். அதற்காகச் சிறந்த ஆசார்யனை வழிபட்டு அவனது உபதேசத்தைப் பெறவேண்டும். இல்லா விடில் ஸம்ப்ரதாயமாய் வந்த நேரிய அர்த்தத்தை அறிய முடியாது. இவ்விஷயத்தை உபநிடதமும் அதன் பொருளை விளக்க வந்த ஸ்ம்ருதி - இதிஹாஸ - புராணங்களும் தெளி வாய்க் கூறுகின்றன.

## ii. ஸம்ப்ரதாயமுறையில் கேட்டுத்தெளிதல்

இப்படி வேதாந்த ஜ்ஞாநத்தை விரிவாக ஸம்பாதிப்பதற்கு வேண்டிய நல்ல ஜ்ஞாநம் இல்லாதவர்கள் சாஸ்த்ரங்களை நன்கு அறிந்த ஆசார்யனிடமிருந்து முக்கியமான ஸம்ப்ரதாய விஷயங்களையாவது உபதேசிக்கப் பெறவேண்டும். இதனா லேயே உஜ்ஜீவிப்பதற்கு வேண்டிய முக்கியமான விஷயங் களில் நிச்சயமான அறிவு ஏற்பட்டுவிடும். இந்த முக்கியமான விஷயங்களையும் ஆசார்ய பரம்பரையில் வந்த உபதேசத்தா லேயே அறியவேண்டுமேயல்லது சாஸ்த்ரத்தைக் கொண்டு மட்டும் அறிந்துவிட முடியாது. ஒருகால் ஒருவன் மேதாவி யாயிருந்து மற்ற சாஸ்த்ரங்களில் உள்ள அறிவின் உதவியால் வேதாந்த சாஸ்த்ரத்தைத் தானே பார்த்து அர்த்தங்களை எளிதில் அறிய முயலக்கூடும். ஆனால் அதில் பயனில்லை. சிறந்த ஸம்ப்ரதாய முறையால் பெறாத அந்த அறிவில் தெளிவும் ஏற்படாது. உஜ்ஜீவிப்பதற்குச் சாதனமாகவும் ஆகாது.

## iii. ஸத்ஸம்ப்ரதாயம் எது?-விளக்கம்

நம் இந்த்ரியங்களுக்குச் சிறிதும் புலப்படாமல் சாஸ்த்ரங்களைத் தழுவி வந்த ஸம்ப்ரதாயத்தைக் கொண்டே அறிய வேண்டிய விஷயங்கள் பல உள. அவையாவன -பகவான்- மோக்ஷம் -அதற்குச் செய்யும் உபாயம் முதலியன. இவற்றை நாம் இங்குக் கண்ணால் காணமுடியுமா ? இவற்றை ஸம்ப்ரதாய முறையால்தான் அறியவேண்டும். இந்த ஸம்ப்ரதாயமும் சாஸ்த்ரங்களை ஆதாரமாகக் கொண்டு தோன்றியதாயிருக்க வேண்டும். சிலர் ஒன்றுகூடிக் கட்டுப்பாடாகச் சாஸ்த்ரத்துக்கு முரண்பட்ட ஒரு ஸம்ப்ரதாயத்தை உருவாக்கி அதையே பரம் பரையாய்க் கேட்டுவந்தால் அதை நம்பக்கூடாது. மேலும் பெரியோர்கள் ப்ரமாணம் என்று ஒருமனமாய் அங்கீகரித்த சாஸ்த்ரத்துக்கு முரண்பட்டுவரும் ஸம்ப்ரதாயத்தையும் நம்பக் கூடாது. ஏனெனில், இவ்விரண்டு ஸம்ப்ரதாயங்களையும் கல்பித்தவர்கள் நேரிய அறிவின்றி விஷயங்களை விபரீதமாய்த் தெரிந்துகொண்டிருக்கலாம். அல்லது பிறரை வஞ்சித்துத் தம் ஸம்ப்ரதாயத்தில் சேர்க்கவும் எண்ணம் கொண்டிருக்க லாம். ஆதலின் இவ்வாறு வரும் ஸம்ப்ரதாயமும் வேதத்தை ஏற்காத சார்வாகம் முதலிய புறமதங்கள் போல நாம் நம்பாமல் விலக்க உரியதேயாகும்.

# 5. ஒன்பது பொருள்

ஸ்ரீ தேசிகன் மூன்று ரஹஸ்யங்களிலும் முக்யமாக தெரிந்து கொள்ளவேண்டிய பொருள்கள் ஒன்பது காட்டியுள்ளார். அவைகளை இங்கு எழுதுகிறோம். முதலில் திருமந்திரத்தில் மூன்று பொருள் அவையாவன:

1. ஸ்வரூப ஸமர்ப்பணம்,
2. பரஸமர்ப்பணம்,
3. பலஸமர்ப்பணம்.

உடம்பு இந்திரியங்கள், மனஸ்ஸு, பிராணன், இவைகளைக் காட்டிலும் வேறாயும், ஜ்ஞான, ஆனந்த ஸ்வரூபனாயும், ஜ்ஞானத்தையுடையவனாயும் தானே ப்ரகாசிப்பவனாயும் தான் பிரகாசிப்பதனால் உண்டாகும் பயனை அடைபவனாயும், அணுவளவுள்ளவனாயும் இருக்கிற நான் ஸகல லோகங்களுக்குக் காரணமாயும், ரக்ஷகனாயும், ஸர்வருக்கும், ஸ்வாமியான லக்ஷ்மீபதியான நாராயணனுக்கு வேறொருவனுக்கு உரியனல்லாதபடி இயற்கையிலேயே உனக்கு சேஷபூதன் என்று நினைப்பது.

2. எப்பொழுதும் சேஷபூதனுமாய், பரதந்திரனுமாய், நான் விரும்பும் பலத்தை அடைவதற்கு ஒரு கைம்முதல் இல்லாதவனுமாயிருக்கிற அடியேனை கர்ம ஜ்ஞான பக்திகளாகிற கார்யங்களில் மூட்டாதே அடைக்கலமாகக் கொண்டு ரக்ஷித்தருள வேண்டும் என்கை.

3. நித்யஸூரிள் போலே ஸர்வதேச கால அவஸ்தைகளிலும் உனக்கே கைங்கர்யம் பண்ணத் தகுதியுள்ள அடியேனுக்கு கர்ம மடியாக வந்த அயோக்யங்கள் எல்லாவற்றையும் கழித்து வழுவிலா வடிமைகொண்டு அடியேனை வாழ்வித்தருள வேண்டும் என்கை.

சரணாகதி மந்த்ரமான த்வயத்தில் உபாய விசேஷம், புருஷார்த்த விசேஷம், விரோதி நிவ்ருத்தி விசேஷம் என்கிற மூன்று பொருள்கள் அறியவேண்டும். அவையாவன: 4 லக்ஷ்மீபதியான நாராயணன் நாம் அபேக்ஷிக்கும் மோக்ஷமாகிற புருஷார்த்தத்திற்கு ஒரு வியாஜ மாத்திரத்தை அபேக்ஷிக்கிறவனுமாய், அந்த வியாஜத்தையும் தானே நடத்திக் கொடுக்கிறவனும், அதற்கு நடுவிலே ஒரு வ்யவதானமில்லாமல் (தானே நேராக) பிரதானமான ஸித்தோபாயம். அகலகில்லேன் என்கிற பாசுரப்படி செய்கிற சரணாகதி ஸாத்யோபாயம்.

குறிப்பு: வியாஜம், போலியான காரணம். ஸித்தோபாயம் நம்மால் செய்யப்படாமல் முன்பேயிருக்கிற உபாயம், ஸாத்யோபாயம் நம்மால் செய்யப்படுவது.

5. புருஷார்த்த விசேஷம். இந்திரியங்களால் உண்டாகிற ஸுகத்தையும், கேவல ஆத்மாநுபவமாகிற ஸுகத்தையும், வெறுத்து தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே என்கிறபடி தன்னோடும் தான் பண்ணுகிற கைங்கர்யத்தோடும் துவக்கற்று (தன்னுடையது என்கிற அகங்கார மமகாரங்களைவிட்டுப்ராப்யமான பகவானை அநுபவித்து அந்த அநுபவ பரிவாஹமாக வருகிற பகவானுகந்த கைங்கர்யங்கள்.

6.விரோதி நிவ்ருத்தி விசேஷம். தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே என்கிறபடி ஸர்வ அவித்யா நிவ்ருத்தி பிறக்கை ; "கைங்கர்யகளில் நான் ஸ்வாதீனமாக நானே செய்தேன், எனக்காகச் செய்தேன், நானே அநுபவித்தேன் எனக்காக அநுபவித்தேன்" என்கிற நினைவு இல்லாமலிருக்கை.

சரமசுலோகத்தில் மூன்று பொருள்களாவன, அதிகாரிக்ருத்யம், சரண்யக்ருத்யம், சரணாகதனுடைய உத்தரக்ருத்யம்.

7. ஜீவஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் இவைகளை உள்ளபடி அறிந்து இந்திரியங்களால் அநுபவிக்கும் விஷயங்களிலும், ஆத்மாநுபவத்திலும் ஆசையற்று, 'அடைக்கலம் புகுந்தவென்னை அஞ்சலென்ன வேண்டுமே' என்கிறபடி ஸித்தோபாயனான ஸர்வலோக சரண்யனுக்கு அடைக்கலம் புகுந்த என்னை அஞ்சேலென்று அருள்புரிய வேண்டும் என்று விண்ணப்பம் செய்கை.

8. சரண்யனான ஸர்வேச்வரன் 'தமர்கூட்ட வல்வினையை நாசம் செய்யும் சதிர்மூர்த்தி* என்கிறபடி ஆச்ரயிக்கிறவர்களுடைய சரணாகதி விரோதிகளான பாபங்களையெல்லாம் போக்குவதற்கு ஸர்வசேஷியான தன்னைத் தாழவிட்டு அவர்கள் ஏற்றின சுமையெல்லாம் ஏறிட்டுக்கொண்டு இவ்வாச்ரிதனை தன்னளவுக்கு உயர எடுக்கை (அதாவது வைகுந்தம் கொண்டு தனக்கு ஸமமாகப் பண்ணுகை).

9. உத்தரக்ருத்யம் -சரணாகதி செய்தவன், 'அத்தனாகி அன்னையாகி' என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தின்படி நமக்கு ஸர்வ வித பந்துவான ஸர்வேச்வரன் நமக்குமேல் பிறப்பொன்றும் வராதபடிசெய்து நம்மை ஆட்கொள்வான் என்று திடமான நிச்சயம் செய்து, வேறு தத்த்வங்களைக் கண்ணெடுத்துப் பாராமல் ஸ்வயம் ப்ரயோஜனமான சாஸ்திரங்களில் சொன்ன கைங்கர்யங்களில் ஈடுபட்டிருப்பது.

இப்படி ஒன்பது பொருள்களைத் தெரிந்துகொண்டு எம்பெருமானைச் சரணாகதி செய்து மோக்ஷமாகிற பலம் நிச்சயம் கிடைக்கும் என்று கவலையின்றி இங்குள்ள நாள் வரையில் சாஸ்திரங்கள் சொன்ன நித்ய நைமித்திக தர்மங்களைச் செய்துகொண்டும், அர்ச்சாவதாரங்களை ஸேவித்துக் கொண்டு அவனுகந்த அனுக்ஞா கைங்கர்யங்களை செய்துகொண்டிருப்பதும் தான் நாம் செய்யவேண்டிய கார்யம்.

(திருக்குடந்தை ஆண்டவன் சதமான உத்ஸவ மலர்)

